பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஆர். வீரப்பன் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979 நிறைவேற்றப்பெறவேண்டும் " என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பட்டது.

16. மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் " என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

Clause 9.

MR. SPEAKER : The qestion is—That clause 9 do for in part of the Bill.

THE HON. THIRU R. M. VEERAPPAN : Mr. Speaker, Sir, I move that—

(i) after clause 9, insert the following :—

" 9. *Amendment of Section 6 of Tamil Nadu Act XVII of* 1955.—In Section 6 of the principal Act, for the expression "prefer an appeal in writing to such officer as may be prescribed, and such

---

* 1979, நவம்பர் 5 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

officer shall, after giving the appellant an opportunity of being heard, pass such order thereon, as he may think fit ", the following expression shall be substituted, namely :—

" prefer an appeal in writing to the Government and the Government shall, after giving the appellant an opportunity or being heard, pass such order thereon, as they may think fit. "

(ii) Clauses 9 to 14 shall be renumbered as clauses 10 to 15 respectively.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 9 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 10 முதல் 14 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மலை வாழ் இடங்கள் (மரங்களைப் பாது காத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68/1979) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெறவேண்டும் " என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(9) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979—(தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 74/1979) ஆய்வுக் குழுவிற்கு கீழ்க் கண்ட 24 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஆய்வுக் குழுவில் உறுப்பினர் களாக நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. திரு. க. சுப்பு.
2. திரு. ஆ. நடராசன்.
3. திரு. கூ. ச. முருகேசன்.
4. திரு. துரை முத்துசாமி.
5. திரு. நா. சுந்தரராஜ்.
6. திரு. சோ. அழகர்சாமி.